**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I,**

**கொடைக்கானல்.**

**S.T.C. No. 251/2022**

**வழக்கு சாட்சி PW.1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : **அருள் பிரகாஷ்** | தொழில் | : எலக்ட்ரிக்கல்ஸ் |
| தகப்பனார் பெயர் | : ஐய்யனார் | கணவர் பெயர் | : -------- |
| கிராமம் | : தாண்டிக்குடி | இனம் | : ஆண் |
| தாலுகா | : கொடைக்கானல் | வயது | : 47/2025 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | நாள் | : 10.06.2025 |

**( எதிரி ஆஜரில் உள்ளார்)**

**<u>சாட்சி மனுவின்பேரில் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

எனக்கு எழுத, படிக்க தெரியும். இந்த வழக்கின் புகாரை நான் எழுதவில்லை என்றால் சரிதான். நான் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்ததால் புகாரினை என் மனைவி எழுதினார் . அந்த புகாரில் எழுதியுள்ள விபரங்கள் எனக்கு தெரியும் . முதல் விசாரணையில் நான் எனது அப்பா புகார் கொடுத்துள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் அது தற்போது எனக்கு நினைவில்லை, எனது அப்பாவும் , மனைவியும்தான் காவல் நிலையம் சென்றார்கள். பகல் 09.00–10.00 மணியளவில் சம்பவம் நடந்து என்னை மருத்துவமனையில் சேர்த்தவுடன் காவல் நிலையம் சென்று விட்டார்கள் . வழக்கு தொடர்பாக போலீசார் என்னை திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் வைத்து சுமார் மாலை 04.00 மணியளவில் என்னை விசாரணை செய்தார்கள் . புகாரிலும், முதல் விசாரணையிலும் எதற்காக அடித்தார் என்று முன்விரோதம் குறித்து காரணம் சொல்லவில்லை என்றால்

சரிதான். சம்பவம் நடந்தபோது என்னை 6 நபர்கள் என்னை அடித்தார்கள், 10 நபர்களுக்குமேல் பொதுமக்கள் கூடியிருந்தார்கள். 6 நபர்கள் அடித்ததாக புகாரில் சொல்லப்பட்டுள்ளதா என்றால் சொல்லப்பட்டுள்ளது. எந்த எந்த எதிரிகள், எந்த எந்த ஆயுதத்தால் தாக்கினார்கள் என்று அவர்களது கருத்தினை காட்டும் செயல் குறித்து குறிப்பிட்டு புகாரிலும், போலீசார் விசாரணையிலும் சொல்லப்பட்டுள்ளதா என்றால் சொல்லப்பட்டுள்ளது . முதல் விசாரணையில் என் கடையை அடித்து நொறுக்கியதாக சொல்லியுள்ள விபரத்தை புகாரிலும், போலீசார் விசாரணையிலும் சொல்லப்பட்டுள்ளதா என்றால் சொல்லப்பட்டுள்ளது. 96267 60674 எனது கைபேசி எண் என்றால் சரிதான் . 96267 60674 என்ற எண்ணில் இருந்து எதிரியின் மனைவிக்கு தொலைபேசி வாயிலாக தவறாக பேசி அதன் காரணமாக எதிரி ஊரில் பஞ்சாயத்தில் சொல்லி பஞ்சாயத்து பேசப்பட்டது என்றால் சரியல்ல , மேற்சொன்னது போன்று பஞ்சாயத்து பேசப்பட்டது என்றாலும் , அதில் எனக்கு ஏற்ப்பட்ட அவமானத்தால் குடித்துவிட்டு, கீழே விழுந்து ஏற்ப்பட்ட காயத்தை பயன்படுத்தி எதிரி மீது புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல . எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லையென்றாலும், நான் அசிங்கப்பட்டதால் பொய்யாக புகார் குறித்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open court and
read over to the witness and acknowledged
by him/her to be correct.

R ARUN PANDIAN Digitally signed by R ARUN PANDIAN Date: 2025.06.10 18:25:41 +0530

District Munsif Cum Judicial Magistate No.I,
Kodaikanal.

**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I,**
**கொடைக்கானல்.**
**S.T.C. No. 251/2022**
**வழக்கு சாட்சி PW.2**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : **அய்யனார்** | தொழில் | : கூலி |
| தகப்பனார் பெயர் | : சின்னகண்ணு பிள்ளை | கணவர் பெயர் | : -------- |
| கிராமம் | : தாண்டிக்குடி | இனம் | : ஆண் |
| தாலுகா | : கொடைக்கானல் | வயது | : 67/2025 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | நாள் | : 10.06.2025 |

**( எதிரி ஆஜரில் உள்ளார்)**

**<u>சாட்சி மனுவின்பேரில் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

சாட்சி அருள்பிரகாஷ் எனது மகன் என்றால் சரிதான் . என் மகனை அடிக்கும் சத்தம் கேட்டு வீட்டினுள் இருந்து வந்தேன் என்றால் சரிதான் . நான் வந்து பார்த்தபோது 5 நபர்கள் தாக்கினார்கள். நான் பார்த்தபோது மகன் கீழே மயக்கம் போட்டு கிடந்தார். 5 நபர்களும் மண்வெட்டி பிடியால் என் மகனை தாக்கினார்கள். 5 நபர்கள் மண்வெட்டி பிடியால் தாக்கியதை புகாரில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன் . இந்த வழக்கு தொடர்பான புகாரை நான்தான் காவல் நிலையத்தில் கொடுத்தேன். 04.03.2018 ம் தேதி பகல் 09.00 மணியளவில் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் . இந்த வழக்கு புகாரை எழுதிய நபர் யார் என்று நினைவில்லை . போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை. 96267 60674 என்ற எண்ணில் இருந்து எனது மகன் எதிரியின் மனைவிக்கு தொலைபேசி வாயிலாக தவறாக பேசி அதன் காரணமாக எதிரி ஊரில்

பஞ்சாயத்தில் சொல்லி பஞ்சாயத்து பேசப்பட்டது என்றால் சரியல்ல, மேற்சொன்னது போன்று பஞ்சாயத்து பேசப்பட்டது என்றாலும், அதில் என் மகனுக்கு ஏற்ப்பட்ட அவமானத்தால் குடித்துவிட்டு, கீழே விழுந்து ஏற்ப்பட்ட காயத்தை பயன்படுத்தி எதிரி மீது புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல . எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லையென்றாலும் , என் மகன் பஞ்சாயத்தில் அசிங்கப்பட்டதால் பொய்யாக புகார் கொடுத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open court and
read over to the witness and acknowledged
by him/her to be correct.

R ARUN PANDIAN
Digitally signed by R ARUN PANDIAN
Date: 2025.06.10 18:25:47 +0530

District Munsif Cum Judicial Magistate No.I,
Kodaikanal.

**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I, கொடைக்கானல்.**

**S.T.C.No. 251/2022**

**வழக்கு சாட்சி PW. 3**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : **தமிழ்செல்வி** | தொழில் | : இல்லத்தரசி |
| தகப்பனார் பெயர் | : ----- | கணவர் பெயர் | : அருள் பிரகாஷ் |
| கிராமம் | : தாண்டிக்குடி | இனம் | : பெண் |
| தாலுகா | : கொடைக்கானல் | வயது | : 38/2025 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | நாள் | : 10.06.2025 |

**( எதிரி ஆஜரில் உள்ளார்)**

**<u>சாட்சி மனுவின்பேரில் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

புகார்தாரர் அருள் பிரகாஷ் எனது கணவர் என்றால் சரிதான். சாட்சி அய்யனார் எனது மாமனார் ஆவார் . சண்டை சம்பவம் சத்தம் கேட்டு நான் வீட்டினுள் இருந்து ஓடி வந்து பார்த்தேன் என்றால் சரிதான் . சம்பவத்தின்போது வாசலில் சுமார் 25 நபர்கள் கூட்டமாக கூடியிருந்தார்கள். நான் பார்த்தபோது என் கணவரை அடித்துக்கொண்டிருந்தார்கள் . என் கணவரை 4 நபர்கள் அடித்துக்கொண்டிருந்தார்கள் . வழக்கின் புகாரை நான்தான் எழுதினேன் . சம்பவம் தொடர்பாக காலை 09.30 மணியளவில் காவல் நிலையத்தில் வைத்து புகார் கொடுக்கப்பட்டது. சம்பவம் தொடர்பாக போலீசார் என்னை மருத்துவமனையில் வைத்து விசாரணை செய்தார்கள் . 96267 60674 என்ற எண்ணில் இருந்து எனது கணவர் எதிரியின் மனைவிக்கு தொலைபேசி வாயிலாக தவறாக பேசி அதன் காரணமாக எதிரி ஊரில் பஞ்சாயத்தில் சொல்லி பஞ்சாயத்து பேசப்பட்டது என்றால் சரியல்ல , மேற்சொன்னது போன்று

பஞ்சாயத்து பேசப்பட்டது என்றாலும் , அதில் என் கணவருக்கு ஏற்ப்பட்ட அவமானத்தால் குடித்துவிட்டு, கீழே விழுந்து ஏற்ப்பட்ட காயத்தை பயன்படுத்தி எதிரி மீது புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல . எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லையென்றாலும், என் கணவர் பஞ்சாயத்தில் அசிங்கப்பட்டதால் பொய்யாக புகார் கொடுத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open court and read over to the witness and acknowledged by him/her to be correct.

R ARUN PANDIAN

Digitally signed by R ARUN PANDIAN
Date: 2025.06.10 18:25:54 +0530

District Munsif Cum Judicial Magistate No.I,
Kodaikanal.